தவிர்ப்பதற்கு வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் தற்போது தினமொன்றுக்கு 2.60 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 2.20 இலட்சம் லிட்டர் பால், சென்னைப் பெருநகர மக்களின் பால் தேவையை பூர்த்தி செய்ய சென்னையிலுள்ள இணையத்திற்கு தற்போது அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், வேலூர் ஒன்றியம் சென்னைக்கு அருகில் அமைந்திருப்பதால், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படுகின்ற 2.60 இலட்சம் லிட்டர் பாலில் உள்ளூர் விற்பனைக்காக 40,000 லிட்டர் நீங்கலாக 2.20 இலட்சம் லிட்டர் சென்னைக்கு அனுப்பப்படுகின்றது. எனவே, வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அவசியமில்லை என்று கருதப்படுகிறது. அப்படியே அமைக்கப்பட்டாலும் அது இலாபகரமாக இயங்க வாய்ப்பில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 227, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

227—

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்

***7539—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1985-ல் மூடிவிட்ட மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நெசவாலையை மீண்டும் திறக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2002 ஏப்ரல் 24]

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலையை மீண்டும் திறக்க இயலாது என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தினிலே பிறந்து, ஜகத்தினை ஆளும் முகராசி கொண்ட மகராசியே, அன்னை சந்தியா ஈன்றெடுத்த மனிதர்குல மாணிக்கமே, தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கிக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயலாது என்று கூறியுள்ளார்கள். மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலை மூடப்பட்ட நிலையில் 2,568 தொழிலாளர் குடும்பங்கள் இன்று வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் தங்களின் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமலும், வயது வந்த பெண்களுக்குத் திருமணம் செய்ய முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று தமிழக மக்களின் தாயாக விளங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி பெற்று இந்த ஆண்டு நிதி ஒதுக்கி, இந்தத் தொழிற்சாலையை திறக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937 ஆம் ஆண்டு முதல் மேட்டூர் பியர்ட்செல் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்த மேட்டூர் மில் நிறுவனம் 1982-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மற்றொரு நிர்வாகத்தின் அடிப்படையிலே செயல்பட தொடங்கியது. ஆலை நிர்வாகம் மாறியதிலிருந்து ஆலை நட்டத்தில் செயல்படத் தொடங்கியது. 1983 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டிற்குள் சுமார் ரூ. 485.60 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

முற்பகல் 10-55

மேற்படி ஆலையில் மாநில தொழிலாளர் ஈட்டுறுதி வருங்கால வைப்பு நிதி போன்ற சட்டபூர்வமான நிலுவைகளை ஆலை நிர்வாகம் செலுத்த இயலவில்லை. வங்கிகளிடமிருந்து நிர்வாகம் பெற்ற கடன் தொகைக்களுக்கான வட்டியைச் செலுத்தாததன் காரணமாக வங்கிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. இதன் விளைவாக ஆலை 1985 ஆம் ஆண்டு மூடப்பட்டது. 11-7-1990 முதல் ஆலையைச் சுத்தப்படுத்தும் பணி தொழிலாளர்களுக்குச் சுழல் முறையில் (Rotation Basis) மேற்கொள்ளப்பட்டு தினக்கூலியாக ரூ.30 வீதம் வழங்கப்பட்டு, ஆலையைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 4-8-1990 மார்ச் மாதம் ஆலை ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் நீதிமன்ற வழக்குகள் மற்றும் நடைமுறை மூலதனம் இல்லாத காரணத்தால் ஆலை செயல்பட

முடியவில்லை. பின்னர் உயர் நீதிமன்ற கம்பெனி பெட்டிஷன் எண் 125/1988-ல் 2-7-1993ஆம் தேதியிட்ட தீர்ப்பின்படி மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையைத் கலைக்க உத்தரவிடப்பட்டது. ஆலை, சென்னை உயர் நீதிமனறத்தின் சட்ட முறையான கலைத்தல் அலுவலர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் மத்திய அரசு கலைக்கப்பட்ட/மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு துணிநூல் புனரமைப்பு நிதியம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை அளித்து வருகிறது. மேற்கண்ட புனரமைப்பு நிதியிலிருந்து மாநில அரசின் பரிந்துரையின்பேரில் 2,306 மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.3,41,76,247 நிவாரணத் தொகையாக ஒட்டுமொத்தமாகப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையைத் திறந்து ஓட்ட நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 முதல் 1996 வரை தமிழக முதல்வராக இருந்த நேரத்தில் இந்த ஆலையில் பணி புரிந்த 2568 தொழிலாளர்களுக்குத் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக ரூ.400 வீதம் கொடுத்து வந்தார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் இந்தத் தொகையை நிறுத்திவிட்டார்கள். சதிகாரர்கள் பின்னிய வலையை அறுத்தெறிந்து இன்று தமிழக முதல்வராக மீண்டும் பதவியேற்றிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தொகையை மீண்டும் அளிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தின் நிதிநிலைமை பற்றி இங்கே இருக்கும் அனைவருக்கும் தெரியும். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைமீது இந்த அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 228, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.